CNR.NO.TNTV05-000195-2021

**சார்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை :** திருமதி.எஸ்.சரண்யா, எம்.எல்.(மு.கூ.பொ.)

சார்பு நீதிபதி, மன்னார்குடி

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

(2053 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ சுபகிருது வருடம் ஆடி மாதம் 27-ஆம் நாள்)

**அசல் வழக்கு எண்.132/2021**

| | | |
|---|---|---|
| சங்கர் கணேஷ் | ... | வாதி |
| | எதிர் | |
| பிரபு (எ) பிரபாகரன் | ... | பிரதிவாதி |

-----

இவ்வழக்கு 06.09.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 22.07.2022 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.விஜயன், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.ஸ்ரீதரன் அவர்கள் ஆஜரானபோதிலும் போதிய அவகாசம் அளித்தும் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய தவறியதாலும், பிரதிவாதி அழைத்தும் வருகையில்லாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு வாதி தரப்பு வாதுரையைக் கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து வந்து, இன்று (12.08.2022) இந்நீதிமன்றம் வழங்கும் ....

**தீர்ப்புரை**

வாதிக்கு தாவா அசல் தொகை ரூ.5,63,780/-ஐ பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் பிரதிவாதி கொடுக்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கட்டளை 7, விதி 1-ன் வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :-**

வாதி தெரிவித்துக்கொள்வது யாதெனில், வாதியிடம் பிரதிவாதி அவருடைய குடும்ப செலவினங்களுக்காக கடந்த 12.01.2019 ஆம் தேதியன்று ரூ.5,00,000/- கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி தேதியில் சாட்சிகள் முன்னிலையில் ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்து மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு இருக்கிறார் என்றும், ஆனால் பிராமசரி நோட்டின் அடிப்படையில் அசல் தொகை மற்றும் வட்டி தொகையை பிரதிவாதி செலுத்தி வைக்காமல் இருந்து வருகிறார் என்றும், பிரதிவாதியை பலமுறை தொகையை செலுத்தி வைக்க கேட்டும் கொடுக்காமல் வீண் காலதாமதம் செய்து வருகிறார் என்றும், வாதி மேற்படி விபரங்களை தெரிவித்து கடந்த 08.09.2020 ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதி உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி 23.09.2020 ம் தேதியன்று பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார். கடன் பெற்ற தேதியிலிருந்து நாளது தேதிவரை பிரதிவாதியால் எவ்விதமான வரவும் வைக்கப்படவில்லை என்பதால், தாவா நோட்டு தொகையை பின்வட்டி மற்றும் வழக்கு செலவுத் தொகையுடன் பிரதிவாதி செலுத்த உத்தரவிடக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.

**3.** பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரானபோதிலும், பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய தவறியதாலும், பிரதிவாதியை அழைத்தும் வருகை இல்லாததால் பிரதிவாதி வருகையில்லாத் தரப்பினராக தீர்மானம் செய்யப்பட்டுள்ளார்.

**4.** வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. மேலும் வாதிக்கு ஆதரவாக ஸ்ரீதரன் என்பவர் வா.சா.2 ஆகவும், மாரிதாஸ் என்பவர் மா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. **வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது**.

வாதியின் வழக்கை நிரூபிக்க வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி கடந்த 12.01.2019 ஆம் தேதியன்று மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.1/- வீதம் வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ரூ.5,00,000/-ஐ சாட்சிகளான வா.சா.2 மற்றும் வா.சா.3 முன்னிலையில் கடனாக பெற்றுக்கொண்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும் வா.சா.2 மற்றும் வா.சா.3 வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டுள்ளார்கள். கடந்த 08.09.2020 ம் தேதியில் வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளதாக கடந்த 23.09.2020 ம் தேதியன்று பதில் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும், அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சாஆ.4 என்றும் வாதி கூறியுள்ளார்.

**6.** வாதி தரப்பு வா.சா.1 சாட்சியத்திலும், வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.4 ஆவணங்களில் இருந்தும், பிரதிவாதி வாதியிடம் கடந்த 12.01.2019 ஆம் தேதியன்று ரூ.5,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 ஆன கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், பிரதிவாதி இதுநாள்வரை

தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதும் நிரூபணம் செய்யப்பட்டிருப்பதால் பிரதிவாதி வழக்கு தொகையினை வட்டியுடன் திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்று தீர்மானிக்கப்படுகிறது.

7. இறுதியில், அசல் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு வழக்கு தொகையான ரூ.5,63,780/- வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை திருப்பி செலுத்தும் தேதி வரை அசல் தொகையான ரூ.5,00,000/-க்கு 6% வட்டியுடன் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 34-ன் கீழ் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/- எஸ்.சரண்யா,)
சார்பு நீதிபதி, (மு.கூ.பொ.),
மன்னார்குடி.

**பின் இணைப்பு** :-

**1. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**:-

வா.சா.1 சங்கர்கணேஷ் (வாதி )

வா.சா.2 ஸ்ரீதரன்

வா.சா.3. மாரிதாஸ்

2. <u>வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வ.எண். | தேதி | விபரம் | ஷரா |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.12.2019 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 08.09.2020 | வாதி வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிக்கு கொடுத்த அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 08.09.2020 | பிரதிவாதி வழக்குரைஞர் மூலம் வாதிக்கு கொடுத்த பதில் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | 12.09.2020 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |

<u>3.பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :- - இல்லை -

(ஒம்/- எஸ்.சரண்யா,)
சார்பு நீதிபதி, (மு.கூ.பொ.),
மன்னார்குடி.